306

பதிவு எண்—M 5730 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சன்மார்க்க இதழ்.

ஆசிரியர் : இளவழகனுர்

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, ஆனி ... 56 துளிர்-38

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 15 JUL 1955 MADRAS

306 / 3-55

நாவலரை ஏன் பாராட்ட வேண்டும்?

ஆறுமுக நாவலனை அன்புடைய தொண்டனை
ஈறில புகழ்கூறி ஏத்துவதேன்?—தேறியவன்
இத்தரையில் ஆவி பொருள்யாக்கை இறைபணிக்கே
தத்தம் புரிந்திட்ட தால்.

கண்டியணி பக்தர் கனபேர் இருந்தபினும்
தொண்டனென நாவலனைச் சொல்லுவதேன்?—பண்டுமுதல்
தெய்வத் திருத்தொண்டே செய்து தினந்தோறும்
சைவம் தழையவைப்ப தால்.

மாசணுகாப் பண்டிதர்கள் வாழ்ந்திருந்தும் பண்டித
பூஷணமாய் நாவலனைப் போற்றியதேன்? —தேசணுகி
மிக்கதமிழ் கற்றவனாய் விற்பனனாய் கேள்விக்குத்
தக்கவிடை சாற்றிடுவ தால்.

நாவல்லர் மிக்கிருந்தும் நாட்டில் அறுமுகற்கு
நாவலர் பட்டத்தை நல்கியதேன்?—மேவலரும்
போற்றும் படியமுதம் பொங்கியெழும் சொற்பொழிவை
ஆற்றும் தகைபெற்ற தால்.

மெத்தவே கற்றோர் மிகுந்தும் இவர்க்குமகா
வித்துவான் பட்டம் விளைந்ததேன்?—சித்திபெற
வித்தகியாள் நாவில் விளையாட உள்ளத்தே
சத்தி நடமிடுவ தால்.

ஆளிருந்தும் நாவலர்க்கே அன்று பரசமய
கோளரிப் பட்டம் கொடுத்ததேன்?—மீளவே
ஏனை மதத்தவரை இந்துவாய் ஆக்குமறத்
தானம் புரிந்திடுவ தால்.

நாவலர் பேச்சென்றால் நல்லோர் பலர்முந்தி
ஆவலாய் வந்தவையை அண்டுவதேன்?—தாவிமிக
நாத்திகரின் உள்ளமும் நம்பவே தத்துவமாய்ச்
சாத்திரத்தைச் சாற்றிடுவ தால்.

ஆதலி னுலிங்கே ஆறுமுக நாவலனர்
வேதனரு ளாலே விளங்குகவே—மேதகுநற்
சுற்றந் தழைக்கச் சுகமுற்றுப் பல்லாண்டு
வற்றாப் புகழுடனே வாழ்ந்து.

—மீ. பாலசுப்பிரமணியம்.

24-6-55–வெள்ளிக் கிழமை: மாணிக்கவாசகர் திருநாள்;

காலை 5-மணிக்குத் தாழக்கோயிலில் பிள்ளையார் வழிபாடு.
,, 6- ,, அம்பலவாணர் திருமுன்னிலையில் திருமுறை வழிபாடு.
,, 7- ,, திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி திருப்பெருந்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய அடிகளார் தலைமையில் யானைமேல் மலர் அம்பாரியில் திருமுறை உலா புறப்பாடு.
(நால்வர் திருவுருவங்களும், அணிஅணியாகத் தேவாரக் கோட்டிகளும் திருமுறை ஓதுதலுடன் பின் வர.)
இந்த ஆண்டு, புதுவை திரு, விநாயக முதலியார், திருக்களர் சுந்தரேசனார், சென்னை சங்கரலிங்கனார், இசைச் சோதிமணி, சைதை, த. கூத்தரசனார் முதலிய தேவாரக் கோட்டிகள் பலர் வருகை)
,, 10 ,, மருந்துமலைச் சாரலில் திருவடி, மாணிக்கவாசகர் வழிபாடு.
(பெரிய திருமுழுக்கு, தொடர்ந்த திருவைந்தெழுத்து உருவுடன்)

பகல் 1- ,, அமுது படையல்.
,, 3-மணி வரை மணிவாசகர்க்குச் சாத்துபடி.
மாலை 4-மணி வரை மணிவாசகர்க்கு ஊசல்.
,, 6-மணி வரை மீண்டும் பாராயணங்களுடன் மலைவலம்.
,, 6½-மணிக்குத் தாழக்கோயிலில் திரிபுரசுந்தரி அம்மை திருக்கோலக் காட்சி; (சந்தனக் காப்பு மலர்க்கோலம் முதலியவற்றுடன்)
,, 7- ,, சென்னை, சாம்பசிவாச்சாரியார் அவர்கள் இசைக் கதை (பக்க வாச்சியங்களுடன்) பொருள்: 'சுந்தரர் திருமணம்.'

25-6-55–சனிக் கிழமை:

காலை 8-மணிக்குத் திருமுறைப் பேரவை.
தலைவர்: குன்றக்குடி அடிகளார்.
தர்மரக்ஷாமணி திரு. K. பாலசுப்பிரமணிய அய்யர் B. A., B.L., M.L.C. பேரவையைத் தொடங்கிவைப்பார்கள்.

சொற்பொழிவு: குடந்தை இசைவாணர் திரு. சுந்தரேசனார்.
சென்னை திரு. ரா. சண்முக சுந்தர செட்டியாரவர்கள்.

மாலை 4-மணி
சொற்பொழிவுகள் ச திரு ஆ. நமசிவாய முதலியார் அவர்கள்
சென்னை திரு. அ. ச. திருஞானசம்பந்தம் M. A. அவர்கள்
,, 6-மணி குடந்தை திரு. சுந்தரேசனார் இசையரங்கு (பக்க வாத்தியங்களுடன்)
,, 9 ,, நன்றிகூறலும், வாழ்த்தும்.

26, 27-6-55–ஞாயிறு திங்கட் கிழமை: ஏனை நல் நூல் விழா.

காலை 5-மணிக்குத் திருக்கழுக்குன்றத்திலிருந்து புறப்பாடு. வழுவத்தூர், முருக்கம்பாக்கம், அருங்குன்றம் வழி வடதிருச்சிற்றம்பலம் என்னும் குருகுலத்துக்குத் திருமுறைகள் எழுந்தருளல்; (அங்கங்கும், அருணகிரியார், பட்டினத் தடிகள், இராமலிங்க அடிகள் முதலியோர் நல் நூல்களுக்கு விழாக்கள், விரிவுரைகளுடன்.)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றம் ஆனிமகத்

திருமுறை இன்னிசைப் பெருவிழா!

(மன்மத ஆனி, 6உ முதல் 13உ வரை
20-6-55 முதல் 27-6-55 வரை
எழு நாட்கள்)

19-6-55—ஞாயிற்றுக் கிழமை:

காலை 7-மணிக்கு — மாம்பாக்கம் குருகுலம் என்னும் வடதிருச்சிற்றம்பலத்தில், பிள்ளையார், மாணிக்கவாசகர்க்கும், திருவள்ளுவர்க்கும் வழிபாடு; திருமுறை, திருக்குறள் என்னும் திருமறை பாராயணம்.

குறள், மெய்கண்டநூல் விழா.

20-6-55—திங்கட் கிழமை:

பகல் 2-மணிக்கு — மதுராந்தகம் திருவெண்காட்டீசர், அம்மையுடன், குருகுலத்துக்கு எழுந்தருளல்; திருமுழுக்கு, மண்டகப்படி முதலியன.

மாலை 4- ,, — திருக்குறள் விழா.
சென்னை, தமிழரசுக் கழகத் தலைவர்
தமிழ்த்திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் விரிவுரை.

,, 6- ,, — திருவெண்காட்டீசர் மதுராந்தகம் எழுந்தருளல். (விடையூர்தியில் நான்மாடவிதி திருவுலா.)

,, 7- ,, — மெய்கண்ட நூல் விழா.
சென்னை, தருமபுர ஆதீனப் பிரச்சார நிலையத் தலைவர்
சிவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் அடிகள் அருளுரை.

21-6-55—செவ்வாய்க் கிழமை:

காலை 5-மணிக்குத் — திருக்கழுக்குன்றம் வழிக் கொள்ளல். (எருபாக்கம், பூதூர், வல்லிபுரம், வழுவத்தூர் வழி; அங்கங்கும் மண்டகப்படி மெய்கண்ட நூல் விரிவுரை முதலியவற்றுடன்.)

22-6-55—புதன் கிழமை

காலை 8-மணிக்குத் — திருக்கழுக்குன்றம் சேர்தல்.

,, 10- ,, — உருத்திரகோடீசர் திருக்கோயில் வழிபாடு.

மாலை 4- ,, — வீதிவலம், அடியார் விழா, தாழக்கோயில் வழிபாடு.

,, 7- ,, — அடிவாரத்தில் வரவேற்பு; நாகர்கோயில் மகாவித்துவான் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் தனிச் சொற்பொழிவு. மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் திருப்பெருந்திரு. சோமசுந்தர தேசிக பரமாசாரிய அடிகளார் தலைமை.

23-6-55—வியாழக் கிழமை:

காலை 8-மணிக்குத் — திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் திருப்படி விழா.

,, 11- ,, — கழுகுக் காட்சி, உச்சிச் செல்வர் வழிபாடு.

மாலை 4. ,, — ஆசிரியருடன் மலைவலம், சொக்கம்மை மலைச்சாரலில் தேனிப்பு(தியானம்)

,, 6- ,, — நால்வர் கோயிலில் வழிபாடு.

,, 7- ,, — குலசை வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள், திருமுருக கிருபாநந்தவாரியார் அவர்கள் சொற்பொழிவுகள். மதுரை அடிகளார் தலைமை.

வேடிக்கைச் சுவை நலம் மங்குவதுடன் கேட்போர் முழுமையும் சுவைக்க முடியாமலும் போகும்; சிரிக்காமலும், அமைதியாகவும், ஏதொரு உணர்ச்சியுமிராமல் நகைச்சுவை மிளிரப் பேசுவதே இயற்கையானது. இத்தகைய பேச்சில் நகைச்சுவை நிறைந்து காணப்படுவதுடன், கேட்போர்க்கும் நலம் உண்டு.

அதுகிடக்க, ஏதானும் ஒரு செய்தியைக் குறித்தோ, ஒரு நிகழ்ச்சியைக் குறித்தோ அன்றி வேறெதைப் பற்றியோ பேசுவதற்குத் திறமை வேண்டும். வளவள வென்று பேசிக் கொண்டு போவதனால் கேட்போருக்கும் அருவருப்புண்டாகி, ஆர்வம் கெட்டு, பொறுமையையும் இழக்க நேரும். அதுபோது கேட்போர் குறுக்குக் கேள்விகளாலும், தொடர்பில்லா வார்த்தைகளினாலும் பேச்சினை மாற்ற முயல்வர். உடனே பேசுவோர் குறிப்புகளினாலும், முகக் குறிகளாலும் தம் பேச்சினை மாற்றிச் சுருக்கிக் கொள்ளல் மிக்க நலம். பொருளற்ற பேச்சினைக் கேட்க அஞ்சிப் பலர் அப்படிப் பேசுவோரிடமிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களைப் பார்த்தும் பாராமலும், காணா முறையில் விலகிவிடுவர். அந்தோ ஒருவரின் அர்த்தமற்ற பேச்சே அவருக்குக் கொடிய பகையாக வளர்ந்து தழைத்துவிடுகின்றது. பிறருடைய கவனத்தைக் கவர முதன் முதலில் இனிமையான குரல் அவசியம் தேவை. எவ்வளவுதான் சுவாரசியமாக, கவர்ச்சியாக, வேடிக்கையாகத் திறம்படப் பேசினாலும் இனிமையான குரலின்றேல் அத்தனை ஆற்றலும் பாழாகப் போய்விடும். பேச்சின் முக்கிய நோக்கம் கேட்போருக்கு இன்பம் அளிப்பது மட்டுமல்ல. அப் பேச்சு உள்ளத்தினைத் தொட்டு விரைவு உணர்ச்சியினைத் தட்டி எழுப்பும் வகையில் பேசுவோரும், கேட்போரும் உள்ளத்தில் இன்பமடைவதேயாகும். பெரிய பேச்சாளரின் முடிந்த இலக்கணம், கேட்போரின் உணர்ச்சி வசப்பட்டு உள்ளத்தினைத் தன்பால் இழுத்துப் பேச்சுக் கேற்றாற்போல் இன்பம் துன்பம், ஆச்சரியம், திகைப்பு, சிரிப்பு முதலிய உணர்ச்சிகளின் வகைகளையெல்லாம் அனுபவிக்கச் செய்து, அவ்வனுபவம் அவர் உயிருள்ளளவும் பயன்படும்படி செய்வதோடல்லாமல் சலிப்பின்றி மீண்டும் மீண்டும் தம் பேச்சுக் கேட்க ஆர்வ மூட்டலேயாம். பேச்சாளர்க்கு உறுதுணையாவன குரலினிமையும் பேச எடுத்துக் கொள்ளும் அப் பொருளைப் பிறர் உள்ளத்தில் பதியுமாறு பேசும் அழகிய முறையும் ஆகும். இப்பேச்சு முறையினாலேயே பேச்சாளரின் கல்வித் திறம், பண்புப் பயிற்சி, ஒழுங்குத் தன்மை இவற்றினை அளவிட்டுக் கூறி விடலாம். பேச்சாளர்க்குப் பண்புதான் மிகப்பெரிய செல்வமாகும்.

ஒருவரின் தனிப்பட்ட குணத்தையோ அல்லது விசித்திரமான போக்கையே, எட்டிக்குப் போட்டியாக எதிர்வாதம் புரியும் தன்மையையோ சாதாரண ஒரு சில வார்த்தைகளினால் நையாண்டி செய்யும் திறம் சிலருக்கு உண்டு. அவர்கள் நோடியான சுடு சொல்லைக் கையாளாமல் நகைச்சுவை நிறைந்த பேச்சினாலேயே மற்றவர் நாணுமாறு குற்றத்தினை எடுத்துக் காட்டுவார்கள். இத்திறம் எல்லோர்க்கும் அமைவதில்லை.

மேடைப் பேச்சுக்கும் வீட்டுப் பேச்சுக்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. இடத்திற்குத் தகுந்தாற்போலும் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறும் பேசும் பேச்சு அமைந்திருக்க வேண்டும். பேச்சின் நடுநடுவே ‘அப்புறம்’ ‘என்ன’? ‘ஏது’? ‘நான் சொல்றது என்னன்னு’ ‘புரிஞ்சுதா’ ‘வந்து’ ‘பாரு’ இவை போன்ற பொருளற்ற வார்த்தைகளைப் பேசாமல் பார்த்துக் கொள்ளல் மிக்க நலம்.

முடிவாகக் கூறுமிடத்து நாம் பேசும் பேச்சு தெளிவாகவும், சுருக்கமாகவும், எளிய நடையிலும், விநயம், நேர்மையானதாகவும், சுவைக்கத் தக்க முறையிலும் அமைதல் நலம். பிறர் உள்ளத்தினைக் கவரும் முறையில் இருப்பது மிக மிக நன்று.

“படிப்பும் அதனால் பெறும் அறிவும் ஒருவரை அரைமனிதனாக்குகிறது. ஆனால் அவரை முழுமனிதராக்குவது அவரது பேச்சுத்திறமையே” எனப்பேச்சுக் கலையைப் பற்றித் ‘தாமஸ் புல்லர்’ (Thomas fuller) கூறுவதனை உள்ளத்திற் பதிய வைத்துக் கொள்ளவேண்டுவது நம் கடமைகளில் ஒன்று.

—o—

யும் என்று எண்ணி வேதத்தை எட்டில் எழுதாமல் வாய்ப்பாடமாக, வழிமுறை வழிமுறையாக ஓதியுணர்ந்து அந்தணர் அவற்றைப் போற்றினார்கள். ஆனால் திருவள்ளுவர் தாம் செய்த நூலை வல்லாரும், வன்மை யில்லாரும் ஓதினாலும் தம் நூலின் திறம் குறையாதென்று, எட்டில் எழுதி வைத்து உலகமெல்லாம் பயனடையுமாறு செய்தார். சொல்லே பெரிதென்று போற்றுகின்ற காரணத்தால் வடமொழி மறையோர் ஒலி வழுவாமற் பாதுகாத்தார். ஆனால் நாயனார் பொருளே பெரிதென்று கொண்ட பெரியாராகலின், தம் நூலை யாவரும் ஒல்லும் வகையில் அறிந்துய்ய வேண்டும் என்னும் பொது நோக்கத்தில் தலைநின்றவராய்த் தம் கருத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தினா ரென்ற உண்மைகள் நன்றாக விளங்குகின்றன. ஆகவே ஒருசாதியினர்க்காவது, ஒரு வகுப்பினர்க்காவது, சிறப்பாகச் செய்யப் பெற்ற நூல் திருக்குறள் அன்றென்பதும், மக்களாய்ப் பிறந்தார் அனைவர்க்கும் அது பொது நூல் என்பதும் இனிது அறியப்படும்.

யாவர்க்கும் பொது நூலாயிருப்பதோடு பொய்யா மொழி தன்னகத்தே பொது நீதிகளைக் கொண்ட பெரு நூலாகவும் விளங்குகின்றது. தமிழ் மொழியில் நீதி நூல்களும், ஒழுக்க நூல்களும் மிகப் பலவாய்க் காணப்பட்டாலும், அவற்றிற்கெல்லாம் தலைமை வாய்ந்து நிற்பது திருக்குறளேயாம். ஆனால் வடமொழியில் வழங்குகின்ற நீதி நூல்களுக்கும் இந்நீதி நூலுக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுகின்றது. வடமொழி நீதிநூல்கள் பெரும்பாலும் சாதி வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு, வழக்கு தண்டம் முதலிய துறைகளில் ஒரு சாதிக்கொரு நீதியாகவும், ஒரு குலத்கொரு நீதியாகவும் அமைத்துக் கூறுகின்றன. குற்றம் செய்தான் ஒருவனுக்கு, அறம்கூறவையத் தலைவரான நீதியாளர், அவன் குலத்தை யறிந்து, அதற்கேற்ற தண்டனை விதிக்க வேண்டும். ஒரே குற்றத்தை உயர்குலத்தானொருவன் செய்தால் எளிய தண்டனையும், தாழ்குலத்தானொருவன் செய்தால் கடிய தண்டனையும் விதிக்கப்பட்டிருத்தலை மநுநீதி முதலாய நீதி நூல்களிற் காணலாம். ஆனால் திருவள்ளுவர் நீதி நூலிலோ, சமன் செய்து சீர் தூக்கும் கோல் போன்ற நடு நிலை வழுவாத பொது நீதியே போற்றப்பட்டுள்ளது. இவ்வுண்மையைச் செந்தமிழ்ப் புலவர் சுந்தரம்பிள்ளையவர்கள் தமது மனோன்மணீயத்தில்,

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்
தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொரு நீதி

என்று மிக உள்ளம் நொந்து, ஏனைய நீதி நூல்களென்னும் பெயர் வாய்ந்தவற்றை உள்ளத்தால் உள்ளலும் தீது என்று கூறியுள்ளார்.

'சங்கப் பலகை'

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

பேச்சு

'மூர்த்தி'

(முன் தொடர்ச்சி)

ஒரு சிலருக்கு வேடிக்கையாகப் பேசிப் பிறரைச் சிரிப்புக் கடலில் திளைக்க வைக்க வேண்டும் என்ற ஆவல் இருக்கலாம். ஆனால் தங்கள் உள்ளத்தில் உதிக்கும் வேடிக்கை நிகழ்ச்சிகளையும். பேச்சுகளையும் பிறருக்குச் சிரிப்புண்டாக்கத் தக்க வழியில் வெளிப்படுத்தி, அவ் வேடிக்கையினைப் பிறர் அனுபவித்து மகிழச் செய்யும் வழி அறியாமலும், வேடிக்கை பொதிந்த வார்த்தைகளை வெளிப்படுத்தும் முறைதனை அறியாமலும் வீண் பேச்சாக்குவோரும் உண்டு. ஒரு வேடிக்கையின் முக்கிய கருத்தை ஒழுங்காகச் சொல்லாமல் சுற்றிச் சுற்றிப் பயனில்லா வார்த்தைகளால் விவரிப்பதனாலும், பொருள் பொதிந்த தக்க வார்த்தைகளைக் கையாளத் தெரியாமையாலும் வேடிக்கை நிகழ்ச்சிகளை விட்டு விட்டு நிறுத்தி நிறுத்திச் சொல்வதாலும் வேடிக்கையின் இனிமை மிகவாகக் குறைந்தழிவதுடன், அவ் வேடிக்கையினை முழுவதும் அனுபவிக்க இயலாமற் போய்விடுகிறது. கேட்பவர்கள் ஆர்வமின்றி, சொல்பவர்களின் மரியாதைக்கும் கட்டுப்பாட்டிற்குமே சிரித்துத்தீரவேண்டி நேரிடுகிறது. அவர்கள் அப் பேச்சில் உள்ள தெளிந்த பயனுள்ள கருத்தினை உணர்ந்து அனுபவித்துச் சிரிப்பதில்லை. ஒருவர் தம் நண்பர்களைச் சிரிக்க வைக்கும் முறையில் முழு நம்பிக்கையும், ஆற்றலும் இருந்தாலல்லாமல் தம் குறிக்கோளில் வெற்றியடைய முடியாது. சிரித்துக் கொண்டே நகைச்சுவையை வெளியிடுவது அவ்வளவு சிறந்த முறையன்று. அச் சிரிப்பினால்

தும் திருக்குறளின் திறமென் பதை அந்நூலை ஓதியுணர்ந்த அறிஞர் தெள்ளிதில் அறிவார்கள். திருக்குறளின் ஆழத்தை அறியுமிடத்துத் தெளிந்த நீர் சுரந்து நிற்கின்ற ஓர் கிணற்றை உற்றுப் பார்ப்பான் ஒருவன், அதன் தளம் எட்டக் கூடிய எளிய ஆழத்திலிருப்பதாக எண்ணி இறங்கும் பொழுது அதன் ஆழம் தன்னளவிற்குப் பன்மடங்கு அதிகமா யிருத்தலைக் காணுதல் போல, இரண்டடியால் ஓதற்கெளிதாய் அமைந்துள்ள திருக்குறள் உணர்தற்கரிதாய் அறிய ஒண்ணாத ஆழமுடையதாய் விளங்குகின்றது. ஆதலின் ஒருவன் எக்காலத்திலும் நாயனார் கருத்தை அளவிட்டு அறிந்து விட்டதாகச் சொல்ல இயலாது. ஆகவே எக்காலத்திற்கும் பொதுவாய உண்மைகள் பொதிந்ததாய், பயில்தோறும், புதிய எழுச்சியும் உணர்ச்சியும் தந்து மக்களுக்கு உறுதி பயக்கின்ற நூல் திருக்குறள் என்று கூறுவதில் யாதும் ஐயமில்லை.

திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும், எல்லாக் காலங்களுக்கும் எவ்வாறு பொது நூலாய் விளங்குகின்றதோ அவ்வாறே எல்லாச் சாதிகளுக்கும் பொது நூலாய் அமைந்திருக்கின்றது. உண்மையில் ஆசிரியரது உள்ளக் கருத்தை நாம் அறிவோமானால் சாதி, குலம், பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறுகின்ற தன்மை அவரிடம் இல்லை யென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கும். தொழில் வேற்றுமையால் உலகில் பாகுபாடுகள் காணப்படுமேயல்லால், பிறப்புக் காரணமாக ஏற்றமும், தாழ்வும், வேற்றுமையும் இல்லை யென்பது ஆசிரியரது அடிப்படையான கருத்தாகும்.

"பிறப் பொக்கும்
  எல்லா வுயிர்க்கும்
சிறப் பொவ்வா
  செய்தொழில்
வேற்றுமையான்"

என்ற குறளே மேற்கூறிய உண்மைக்குப் போதிய சான்றாகும். இத்தகைய பொதுத் தன்மையை அக்காலத்திய புலவர்களும் போற்றிப்பாராட்டி யிருக்கின்றார்கள். திருக்குறளுக்குச் சாற்றுக்கவி கொடுத்த புலவர்களின் பாக்கள் இப்பொழுது திருவள்ளுவமாலை யென்னும் பெயரால் வழங்குகின்றன இவ்வாறு சிறப்புப் பாயிரம் அளித்த பலவர்களிற் சிலர் வடமொழியில் சீரிய நூலாகவும் செய்யா மொழியாகவும் கருதப்படுகின்ற வேதத்தையும் தமிழ் மொழியில் தமிழ் மறையென்று பெயர் பெற்றொளிரும் பொய்யா மொழியையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றார்கள்

"செய்யா மொழிக்கும்
  திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும்
  பொருள் ஒன்றே--செய்யா
அதற்குரியர் அந்தணரே
  ஆராயின்
இதற்குரியர் அல்லா
  தார் இல்"

என்று வெள்ளிவீதியார் என்னும் புலவர் கூறுகின்றார். ஆரிய வேதமாகிய எழுதா மறைக்கும், தமிழ் வேதமாகிய பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றேயாம். ஆயினும் வடமொழி வேதத்திற்கு அந்தணரே உரியரல்லால், மற்றைய வகுப்பினர் அதனைப் படித்துப் பயனடைதற் குரியரல்லர். ஆனல் பொய்யா மொழியாய தமிழ் வேதத்தைப் படித்துப் பயனடைதற் குரியரல்லாதாரில்லை என்றமையால் எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் திருக்குறளைப் படித்துப் பயனடையலாகும் என்ற பரந்த பொது நோக்கமே இந்நூல் யாவர்க்கும் பொது வென்னும் உண்மைக்குப் போதிய சான்றாகும். இன்னும் திருக்குறளை வியந்து கூறிய கோதமனார் என்னும் மற்றொரு புலவர்,

"ஆற்றல் அழியுமென்று
  அந்தணர்கள்
  நான்மறையைப்
போற்றி யுரைத்து
  எட்டின் புறத்தெழுதார்
    எட்டெழுதி
வல்லுநரும், வல்லாரும்
  வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்
  சோர்வு இன்று,"

என்று கூறினர். வடமொழி நான்மறைகளையும் ஏட்டில் எழுதி வைத்தால், பலரும் படித்தலால் அவற்றின் ஆற்றல் குறை

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53கிடங்குத் தெரு, சென்னை.

வருகின்றார்கள். இது மிக மிக வருந்தத்தக்கதாகும். அவர்கள் பள்ளியில் படிக்கும் படிப்பின் சம்பந்தமாக விளக்கந்தரும் பொருட்காட்சிகள், பொருட்காட்சிச் சாலைகளில் இடம் பெறவேண்டும். அப்போதுதான் படிக்கும் மாணவர்களுக்குத் தங்கள் கல்வியில் மேலும் ஆர்வம் பிறக்கும்.

பொருட்காட்சியகங்கள் வெறும் பொழுதுபோக்கிற்காக ஏற்பட்டவையல்ல. நாட்டின் முன்னேற்றத்தை அளந்து கூறும் கஜக்கோலாகப் பொருட்காட்சிச் சாலைகள் விளங்கல் வேண்டும். நம் நாட்டைப் பற்றிய செய்திகளை நம் நாட்டில் உள்ள மக்கள் அறியாமல் இருப்பது வெட்கக் கேடாகும். நாட்டறிவைப் பரப்பும் எளிய வழி பொருட்காட்சிகளே. நாட்டின் சரித்திர சம்பந்தமான வரலாறு, விடுதலை இயக்க வளர்ச்சியும் வெற்றியும் பொருளாதார நிலை, அன்றும்–இன்றும், கல்வி வளர்ச்சி–மக்களின் தொகை போன்ற புள்ளி விவரங்கள் தாய் மொழியில் நன்கு விளக்கப்படல் வேண்டும். அதுமட்டுமா? நமது நாட்டு முன்னேற்றத்துக்கான திட்டங்கள் அவற்றைப் பற்றிய விரிவான விளக்கங்கள், அவற்றில் பொது மக்களின் தொண்டு, அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் போன்றவற்றை எளிதில் மக்களுக்கு விளக்கலாம். இவையெல்லாம் எப்போதோ ஒருமுறைதோன்றும் கண்காட்சிகளில் (**Exhibrtions**) தான் விளக்கப்படுகின்றன; அதுவும் கட்டணமுறையிலே; இத்தகைய சேதிகள் மக்களுக்கு அவசியம் பரப்பப்படவேண்டிய சேதிகளாகும். அவற்றை ஏன் பொருட்காட்சிகள் வாயிலாக அரசியலார் பரப்பக் கூடாது?

பழமைச் சின்னங்களும், வரலாற்று விளக்கங்களும் மட்டும் அமைந்துவிட்டால் பொருட்காட்சிச் சாலை சிறப்படையும் என்று சொல்வது தப்புக்கணக்குப் போடுவதாகும். பழமையை அடிப்படையாகக் கொண்டெழுந்த புதுமை விளைவுகளையும், நாட்டைப் பற்றிய எல்லா விளக்கங்களையும் பொருட்காட்சிச் சாலைகளின் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும்.

பொருட்காட்சிச் சாலைகள் பொழுதுபோக்குக்கா என்று நம் உள்ளம் கேட்டால், இல்லை, இல்லை என்ற ஆயிரமாயிரம் குரல்களைக் கேட்டு நம் உள்ளம் பூரிக்கின்றது. அரசியலார் இதை உடனடியாகத் தங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொண்டு ஆவன செய்வர் என்று எதிர்பார்ப்பதில் நியாயமிருக்கிறதன்றோ?

—"அருணன்"

காலத்தால் பொது நூல்

(ரா. பி. சேதுப் பிள்ளை)

ஒரு நூலின் பெருமை காலத்தாற் காணப்படுமென்பது மொழிநூல் வல்லார் துணிபாகும். காலம் என்னும் கடுவாரியில் அகப்பட்டு, அதனை எதிர்த்து வெற்றி பெற ஆவியற்று மறப்பென்னும் கடலுள் ஆழ்ந்து போகின்ற நூல்கள் உலகில் பலவாகும். ஆனால் உயரிய உண்மைகள் அமைந்த நூல்கள் காலஞ் செல்லச் செல்ல, வளர் மதியம் போல வளர்ந்தோங்கி எங்கும் தன்னொளி பரப்பி, உலகமுள்ளளவும் வாழையடி வாழையென வருகின்ற மக்களனைவர்க்கும் தமது வண்மையையும் வளத்தையும் அளித்து மேம்படச் செய்கின்றன. தெய்வப் புலவர் செய்த 'தமிழ் மறை' இத்தகைய நூலாகும். முக்காலத்திற்கும் பொதுவாய விழுமிய உண்மைகள் நிறைந்து திகழுகின்ற காரணத்தால் திருக்குறளைக் காலம் கடந்த நூல் என்று கூறுவது மிகையாகாது. ஒவ்வொரு காலத்தில் எழுதப்படுகின்ற நூல்களிற் பல, அக்காலத்தில் வாழும் மக்கள் வாழ்க்கைக்கே பயன்படத் தக்கனவாய், அக்காலத்தில் மாந்தர் கருத்தைப் பெரிதும் கவர்கின்ற பொருள்களைப் பற்றியே எழுதப்பட்டனவாயிருப்பதால், அவை பிற்காலத்தில் பயன் குன்றிப் பாழ்படுகின்றன. ஆனால் மக்கள் உயர் நெறியறிந்து உய்தற்குரிய உறுதிப் பொருள்களாய் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றின் திறம் தெரிந்து வள்ளுவனார் செய்த நூல் எக்காலத்திலும் மாறாப் பயன் தரும் மாண்புடைய நூலாய் விளங்குகின்றது.

ஒருவன் தன் வாழ்நாளிலேயே பலமுறை படிப்பானாயின், அவனது அறிவின் திறத்திற்கும், அனுபவ முதிர்ச்சிக்கும், மனப்பாங்கிற்கும் ஏற்ற பொருள் சுரக்கும் ஞானச் சுனையாகவும் விளங்குகின்றது. நவில்தொறும் நயம் பெருக்கும் நூலே விழுமிய நூல் என்றும், அறியுந்தொறும் முன் அறியாமையை விளங்கக் காட்டுதலே அருநூலின் தன்மை என்றும் நாயனார் கூறிய சீரிய உண்மைகளுக்கு அவர் நூலே சிறந்த சான்றாகும். நவில்தோறும் நவில்தோறும் நயம் மிக விளைப்பதும் பயில்தோறும் பயில்தோறும் பயன்மிக விளைப்ப

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

இலை	மன்மத, ஆனி,	தளிர்
7	17-6-55 வெள்ளி.	37

பொருட்காட்சிச் சாலைகள் பொழுது போக்குக்கா?

நமது நாட்டில் கல்வியைப் பரப்பும் சாதனங்கள் பள்ளிக்கூடங்கள் மட்டுமே என்று நினைத்தால் அது தவறான கருத்தாகும். வெறும் ஏட்டுப்படிப்பின் மூலமும், ஆசிரியரின் போதனை மூலமும் கல்வி வெகு சீக்கிரமாகப் பரப்பப்பட முடியாது. இன்று நம் நாட்டில் படியாதவர் தொகை படித்தவர் தொகையைவிட மூன்று மடங்கு அதிகமாக இருக்கின்றதென்றால் கல்வியைப் பரப்ப எவ்வளவு முறைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றன என்பதன் பொருள் தெளிவாகும்.

படக்காட்சிக் கல்வியும், கண்காட்சிக் கல்வியும், கல்வியின் பகுதிகளாக விளங்குகின்றன. பொருட்காட்சிச் சாலையும் கல்வியைப் பரப்பும் சாதனமாக அமையும், அமைதல் வேண்டும். மேனாடுகளிலே இருக்கும் பொருட்காட்சிச் சாலைகள் எவ்வெத்துறைகளில் பணியாற்றி வருகின்றன என்பதை நோக்கினால், நம் நாட்டுப் பொருட்காட்சிச் சாலைகள் இன்னும் எவ்வளவு முன்னேற்றம் அடையவேண்டும் என்பது விளங்கும்.

மேனாட்டிலே, பொருட்காட்சிச் சாலைகள், வணிகருக்கு வழிகாட்டியாகவும், உழவருக்கு உறுதுணையாயும், மாணவருக்கு மனப் பயிற்சி அளிப்பவையாயும் விளங்குகின்றன. அண்மையில் புதுடில்லியில் தேசிய நூல் நிலையக் கட்டடத்துக்குக் கால்கோள் விழா வுரை ஆற்றிய பிரதமர் நேரு அவர்கள் தாம் கண்ட மேனாட்டுப் பொருட்காட்சிசாலை ஒன்றுபற்றி அழகாகவருணித்தார். "மாட்டு வண்டி முதல் வான வூர்தி வரை போக்குவரவின் வரலாறு அப்பொருட்காட்சியில் தெள்ளத் தெளிவுற விளக்கப்பட்டிருந்தது" என்று அவர் கூறினர். நம் நாட்டிலும் அவ்வாறு அறிவு பரப்பும் அங்கங்களாகப் பொருட்காட்சிச்சாலைகள் அடையவேண்டும் என்று வற்புறுத்தினர்.

பொருட்காட்சிசாலை, வெறும் பல்வேறு பொருட்காட்சியாகக் கொண்டிருந்தால் மட்டுமே போதாது என்பதன் பொருள் வாசகர்களுக்குத் தெளிவுற இப்போது விளங்கும். சென்னைப் பொருட்காட்சிச் சாலையை ஒரு நாள் சென்று நாம் காண்போமாகில், சாரை சாரையாகப் போகும் மக்களில் படித்தவரைவிடப் பாமரர் தொகையை அதிகமாகக் காணலாம். பாமரர்களுக்கு, வழிகாட்டிகள், இது இப்படிப்பட்டது என்று விவரித்துக் கூறுகிறார்களா என்றால் அதுதான் இல்லை. பொருள்களை விளக்கும் பலகைகள், பெரும்பாலும் தாய்மொழியிலேயே எழுதப்பட்டிருத்தல் மிக மிக அவசியமாகும். அப்போதுதான் தாய்மொழியாவது படிக்கத் தெரிந்தவர், பொருட்காட்சிச் சின்னங்களை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

மேலும், இன்று முதியோர் கல்வி நிலையங்கள் என்று நாடெங்கும் கல்வி பரப்பும் கழகங்களைக் காண்கிறோம். இன்று படிக்காத மக்கள் பெரும்பாலோர் வயதானவரே. இளைஞர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்படுவதால் அவர்களைப்பற்றிக் கவலையில்லை. கற்க விரும்பும் முதியோருக்கு மேலும் ஆர்வத்தைத் தூண்டும் தூண்டுகோலாகப் பொருட்காட்சிச் சாலைகள் அமையவேண்டும். ஆதிகால மனிதன் ஏன் நாகரிகமற்றிருந்தான். இக்கால மக்களில் படியாதவர் படும் பாடு, இவற்றைப் பற்றிச் சிற்பங்கள் மூலமும் சித்திரங்கள் வாயிலாகவும் விளக்கி, அறிவுறுத்தினல், படிக்காதவரும் ஆர்வத்துடன் கற்க முனைவர்.

பள்ளியில் படிக்கும் இளைஞர்கள் வெறும் ஏட்டுப் படிப்பையே படித்து வெறுப்படைந்து